(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

நான்காம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

## 4th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகக்கல்வி I<br>Business Studies I | Two Hours<br>Gr -13 (2023) | 32 | T | I |

(மேலதிக வாசிப்பு 10 நிமிடம்)

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

## பகுதி – I

01. வியாபாரியின் தொழிற்பாடாக அமைவது எது?
   1. விருப்பங்களை உருவாக்குதல்.
   2. தேவைகளையும், விருப்பங்களையும் தொடர்புபடுத்துதல்.
   3. சமூகத்தின் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்தல்.
   4. தேவைகளையும், விருப்பங்களையும் திருப்திப்படுத்துதல்.
   5. நேரத்தடை, புவியியல் தடைகளை நிவர்த்தி செய்தல். (…….)

02. வணிகப்பரம்பல் தொடர்பாக ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு.
   A: மிகை உற்பத்தியினை மற்றுமோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தலே வியாபாரத்தின் மூலமாகும்.
   B: மிகை உற்பத்தியின் விளைவாகவே நேர் உற்பத்தி ஏற்பட்டது.
   C: நேர் உற்பத்தியில் ஈடுபட்டதன் காரணமாக தனிநபர் சிறப்புத் தேர்ச்சி ஏற்பட்டது.
   D: பண்டமாற்று முறையின் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு பரிமாற்றூடகமாக முதலில் உலோக நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன.
   E: வணிக துணைச்சேவைகளின் விருத்திக்கு பெரிதும் வித்திட்டது கைத்தொழில் புரட்சியே ஆகும்.
   மேற்படி மாணவர்களின் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றுக்களினைக் கொண்ட தொகுதி யாது?
   1. A, B, C 2. A, C, E 3. C, D, E 4. A, B, D 5. B, C, D (…….)

03. பொதுவாக எந்தவொரு வணிகத்திற்கும், உள்ளீட்டு வெளியீட்டுச் செயன்முறைகள் காணப்படுவதுண்டு, வெதுப்பகம் ஒன்றின் உள்ளீட்டு, வெளியீட்டு வணிகச் செயற்பாடுகளை சரியாக கொண்ட செயன்முறை எது?
   1. உள்ளீடு → உற்பத்திச் செயன்முறை → வெளியீடு
   2. உள்ளீடு → உருமாற்றம் → வெளியீடு
   3. உள்ளீடு → மாற்றுச் செயன்முறை → வெளியீடு
   4. உள்ளீடு → செயற்பாட்டுச் செயன்முறை → வெளியீடு
   5. உள்ளீடு → வணிகக்கருமங்கள் → வெளியீடு (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04. வணிகச்சூழல் காரணிகளை நாம் வேறுபடுத்திப் பார்க்கின்ற போதிலும், அவற்றுக்களிடையே ஏதோ ஒரு வகையில் இடைத் தொடர்புகள் காணப்படுவதுண்டு. அத்தகைய இடைத்தொடர்பினை எடுத்துக்கூறும் கூற்றினைத் தெரிவு செய்க.

1. கட்டுப்படுத்தக்கூடியன அகச்சூழலாகவும், கட்டுப்படுத்த முடியாதன புறச்சூழலாகவும் கருதப்படுவதுண்டு.
2. வணிகப்புறச்சூழலை அண்மிய, பேரினச் சூழல் என பாகுப்படுத்த முடியும்.
3. பேரின சூழல் காரணிகள் மீது வணிகர் செல்வாக்கினைச் செலுத்த முடிவதுண்டு.
4. சில அரசியல் கொள்கைகள், பொருளாதார சூழல் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும்.
5. தொழில்நுட்பச் சூழல் சகல சந்தர்ப்பங்களிலும் வணிகத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும். (…….)

05. எதிர்கால சந்ததியினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இருக்கின்ற உரிமையினைப் புறக்கணிக்காது, நிகழ்காலத் தேவையினை அடைந்து கொள்வதற்கான அபிவிருத்தி எதிர்பார்க்கப்படுவது?

1. நிலைபேறான அபிவிருத்தி
2. பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி
3. சூழல் நிலைபேறான அபிவிருத்தி
4. சமூக நிலைபேறான அபிவிருத்தி
5. வினைதிறனான வள அபிவிருத்தி (…….)

06. பொருளாதாரத்திற்குரிய அனைத்து உற்பத்தி வளங்களையும் வினைத்திறன் கொண்ட உற்பத்திக் கருமம் ஒன்றில் ஈடுபடுத்தி இருத்தல் அரசின் எத்தகைய பொருளாதார நோக்கமென கருதமுடியும்.

1. பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்.
2. பூரண வேலைவாய்ப்பு மட்டம்.
3. நியாயமான வருமானப் பரம்பல்.
4. பொருளாதார நிலைப்புத்தன்மை.
5. சாதகமான சர்வதேச வியாபாரம். (…….)

07. முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும், நுகர்வோருக்கு போட்டி விலையில் பொருட்கள், சேவைகளை தேவையான அளவு வழங்குவதற்கு உறுதியளிப்பதனை நோக்கமாக கொண்ட நுகர்வோர் பாதுகாப்புடன் தொடர்புடைய அரச நிறுவனம் பின்வருவனவற்றுள் எதுவென நீர் கருதுகின்றீர்?

1. இலங்கை தரக்கட்டளைகள் பணியகம்.
2. மத்திய சுற்றாடல் அதிகார சபை.
3. அளவை நிறுவை தரநியமச் சேவைத்திணைக்களம்.
4. சர்வதேச நுகர்வோர் அமைப்பு
5. நுகர்வோர் அலுவல்கள் தொடர்பிலான அதிகார சபை (…….)

8. வணிக அமைப்பு வகை தொடர்பிலும், அதன் குணாம்சங்கள் தொடர்பிலும் ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு.

A: தனியார் துறைக்குரிய பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையுள்ள, இலாபம் உழைத்தலை நோக்காகக் கொள்ளாதா வணிக அமைப்பு வகை கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் என்பதாகும்.

B: பொதுத்துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்படாத சட்ட ஆளுமையுடைய, இலாப நோக்கற்ற வணிக அமைப்பு வகை அரச திணைக்களங்களாகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

C: தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையுடைய, ஆகக்குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை பத்தினைக் கொண்டிருக்க வேண்டிய வணிக அமைப்பு வகை கூட்டுறவு வணிகங்களாகும்.

D: பொதுத்துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையற்ற, இலாபம் உழைத்தலை நோக்கமாகக் கொண்ட வணிக அமைப்பு வகை அரச கூட்டுத்தாபனங்கள் ஆகும்.

E: தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்படாத, சட்ட ஆளுமையற்ற, தனியொருவரால் ஆரம்பிக்க முடியாத வணிக அமைப்பு வகை பங்குடமை வணிகங்களாகும்.

மேற்படி மாணவர்களின் கூற்றுக்களுள் மிகச்சரியான கூற்றினை குறிப்பிட்டுள்ள மாணவன் அல்லது மாணவர்கள் யார்?

1. A மட்டும். 2. Bயும் Dயும். 3. Cயும் Eயும்.
4. D மட்டும். 5. E மட்டும். (…….)

9. **கூற்று A**: பொது நோக்கம் ஒன்றினை முன்வைத்து ஆகக்குறைந்தது இருவருடனும், உச்ச எண்ணிக்கை வரையறையற்றும் உருவாக்கும் அமைப்புக்கள் பொதுவாக பங்குகளை வழங்குவதில்லை.

**கூற்று B** : வரையறுத்த தனியார் கம்பனிகள், ஆகக்குறைந்தது ஒரு இயக்குனருடன் உருவாக்கப்படுவதுடன், கம்பனிப்பங்குகளை பகிரங்கமாக வழங்கக்கூடியனவாகும்.

மேற்தரப்பட்ட இரண்டு கூற்றுக்களிலும்,

1. இரண்டு கூற்றுக்களுமே சரியானவை.
2. இரண்டு கூற்றுக்களுமே தவறானவை.
3. கூற்று A தவறானது, கூற்று B சரியானது.
4. கூற்று A சரியானது, கூற்று B தவறானது.
5. Aயும் Bயும் சரியானது என்பதுடன், B யினூடாக A விபரிக்கப்படுகின்றது. (…….)

10. அட்டவணை X இல் அங்கீகார வணிகத்துடன் தொடர்புடைய தரப்பினரும், அட்டவணை Y இல் அங்கீகார வணிக முறையின் அனுகூலங்களும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A அங்கீகாரம் வழங்குபவர்.<br><br>B அங்கீகாரம் பெறுபவர். | 1. பாரிய சந்தைகளை இலகுவாகவே பெற்றுக்கொள்ள முடியும்.<br>2. விளம்பர செலவுகளை பகிர்ந்து கொள்ள முடிதல்.<br>3. தோல்வியடையும் போக்கு குறைவாக காணப்படல்.<br>4. வணிகத்தை விரிவுபடுத்தக்கூடிய ஆற்றல் கிடைத்தல். |

X இற்கும், Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1. A - 1, 2 , B – 3, 4 2. A – 2, 4 , B – 1, 3 3. A - 1, 4 , B – 2, 3
4. A – 1, 3 , B – 2, 4 5. A – 2, 3 , B – 1, 4 (…….)

11. முயற்சியாண்மைச் செயன்முறையின் படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A – செயற்படு நிலைக்கு மாற்றுதல்.
B – எண்ணக்கருக்களை உருவாக்கலும், வணிகத்திட்டத்தை தயாரித்தலும்.
C – அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளல்.
D – புத்தாக்கம் புனைதல்.
E – தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்ளல்.

மேலே தரப்பட்ட முயற்சியாண்மைச் செயன்முறைகளின் சரியான படிமுறையினைக் கொண்ட தொகுதியாக அமைவது எது?

1. A, E, C, D, B 2. B, E, A, C, D 3. C, B, E, D, A
4. D, B, E, A, C 5. E, D, A, C, B (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12. இலங்கையில் தொழிற்படும் நிதி நிறுவனங்களை பல்வேறு மூலங்களில் வகைப்படுத்த முடிவதுண்டு இதன்படி அட்டவணை X இல் பிரதான நிதி நிறுவன வகைகளும், அட்டவணை Y இல் அவற்றின் கீழ் இலங்கையில் தொழிற்படும் நிதி நிறுவனங்களுக்கான உதாரணங்களும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A. வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள். | 1. இலங்கை சேமிப்பு வங்கி. |
| B. ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள். | 2. வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம். |
| C. வங்கித்துறை | 3. கிரமின் நுண்கடன் கம்பனி. |
| D. விசேட நிதிநிறுவனங்கள் | 4. செட்டிக்குளம் கூட்டுறவு கிராமிய வங்கி. |

X இற்கும் Y இற்குமான பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1. A – 1, B – 4, C – 3, D – 2
2. A – 2, B – 3, C – 1, D – 4
3. A – 4, B – 1, C – 2, D – 3
4. A – 3, B – 2, C – 4, D – 1
5. A – 4, B – 2, C – 1, D - 3 (…….)

13. பின்வருவன வணிகமொன்றில் இடம்பெற்ற சில இடர்கள் ஆகும்.

A : வடிவமைப்பு மாற்றங்களால் ஏற்பட்ட இழப்புக்கள்

B : விநியோக வாகனம் விபத்துக்குள்ளாகுதல்.

C : கடன்பட்ட ஒருவர் முறிவடைந்து விட்டதாக அறிவித்தல்.

D : முகாமைத்துவ தீர்மானத்தினால் சந்தை நட்டம் ஏற்பட்டிருத்தல்.

E : வணிக கட்டிடத்தின் இரும்பிலான பாகங்கள் துருப்பிடித்திருத்தல்.

F : வணிக உரிமையாளர் மாரடைப்பினால் மரணம் அடைந்திருத்தல்.

மேற்படி இடர்களில் காப்புறுதி பாதுகாப்பின் ஊடாக பாதுகாப்பினை கோர முடியாத இடர்களாக நீர் எவற்றைக் கருதுகின்றீர்.

1. Aயும் Bயும்
2. Cயும் Eயும்
3. Aயும் Dயும் Eயும்
4. Cயும் Eயும், Fஉம்
5. F மட்டும். (…….)

14. தொடர்பாடல் முறைகளின் சில அனுகூலங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. கூடிய விளக்கத்துடன் தகவல்களை முன்வைக்க முடிதல்.
2. செய்தியினை இலகுவாக விளங்கிக் கொள்ள முடிதல்.
3. செய்தியின் இரகசியத் தன்மை பேண முடிதல்.
4. தரவுகள், குறிப்புக்களையும் தொடர்பாடல் செய்ய முடிதல்.
5. தொடர்பாடல் செய்யப்பட்டதற்கு சான்றுகள் இருத்தல்.

மேலே தரப்பட்டவற்றுள் சமிக்ஞை மற்றும் குறியீட்டு மூலமான தொடர்பாடலின் அனுகூலமாக கருதப்படக்கூடியது எது? (…….)

15. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையினை (Global Positioning System – GPS) பயன்படுத்துவதன் மூலம் பொருட்களுக்கான போக்குவரத்தின் போது, வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக் கூடிய அனுகூலமாக கருத முடியாதது பின்வருவனவற்றுள் எது?

1. குறுகிய தூரப் பாதையை அறியக்கூடிய ஆற்றல்.
2. பயணிக்கவுள்ள தூரத்தை அறியக்கூடிய ஆற்றல்.
3. கிரயங்களை தீர்மானிக்கக்கூடிய ஆற்றல்.
4. பாதையில் தோன்றியிருக்கக்கூடிய தடைகளினை அறியக்கூடிய ஆற்றல்.
5. வாகனம் எவ்விடத்தில் நிற்கின்றது என்பதை அறியக்கூடிய ஆற்றல். (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

16. இருப்புக்கட்டுப்பாடு, உற்பத்தித்திட்டமிடல், பொருள்கொள்வனவு, களஞ்சியப்படுத்தல், போன்ற கருமங்களை முறையாக மேற்கொள்வதற்கு முக்கியமான கருமமாக கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எதுவாக கருத முடியும்?
   1. தொடர்பாடல்.
   2. களஞ்சியப்படுத்தல்.
   3. உற்பத்தியும், தரப்படுத்தலும்.
   4. விற்பனையும், மேம்படுத்தலும்.
   5. போக்குவரத்தும் வழங்கல் சேவையும். (…….)

17. உற்பத்திப் பொருள் விநியோகச் செயற்பாட்டில் உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்குமிடையே பல்வேறு தரப்பினர்கள் தொழிற்படுவதனைக் காணமுடிவதுண்டு. இத் தரப்பினர் யாவரையும் பொதுவாக எவ்வாறு அழைக்க முடியும்?
   1. இடைத்தரகர்கள்.
   2. முகவர்கள்.
   3. பொறுப்புதரகர்கள்.
   4. வழங்குநர்கள்.
   5. சில்லறை வியாபாரிகள். (…….)

18. இந்திய அரச வங்கியில் (State Bank of India) கணக்கு வைத்துள்ள சென்னை சில்க்ஸ் நிறுவனத்தில் இருந்து பட்டுப்புடவைகளை மொத்தமாக இறக்குமதி செய்ய சஞ்சித் தீர்மானித்துள்ளார். சஞ்சித்திற்கு இலங்கை வங்கியில் கணக்கு உள்ளது.
   இது தொடர்பில் நாணயக்கடிதம் பிறப்பிக்க வேண்டியதாவது,
   1. சஞ்சித்தினால் சென்னை சில்க்ஸிற்கு எழுதப்படும்.
   2. சஞ்சித்தினால் இலங்கை வங்கிக்கு எழுதப்படும்.
   3. இலங்கை வங்கியினால் இந்திய அரசவங்கிக்கு எழுதப்படும்.
   4. சென்னை சில்க்ஸினால் இலங்கை வங்கிக்கு எழுதப்படும்.
   5. சஞ்சித்தினால் இலங்கை சுங்கத்திற்கு எழுதப்படும். (…….)

19. பின்வருவனவற்றுள் எது இறக்குமதியாளரொருவரின் ஒரு தொழிற்பாடு அன்று?
   1. கட்டளையட்டவணையினைத் தயாரித்தல்.
   2. சுமைச்சீட்டினை அனுப்புதல்.
   3. இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளல்.
   4. நாணயக்கடிதத்தினை தயாரித்தல்.
   5. இறக்குமதி தீர்வைகளை சுங்கத்திற்கு செலுத்துதல். (…….)

20. முகாமைத்துவம் தொடர்பிலான அடிப்படை எண்ணக்கருக்கள் X அச்சிலும், அவற்றிற்கான விளக்கங்கள் Y அச்சிலும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A- திட்டமிடல். | 1. தனிநபர்கள் கருமமாற்றுவதற்கு வழி காட்டும். |
| B- வினைதிறன். | 2. முகாமைத்துவத்தின் மையப்பணி. |
| C- பயனுறுதி | 3. கருமங்களை சரியாகச் செய்தல். |
| D- இலட்சியக்கூற்று | 4. தனிநபர் ஒருவருக்கு கிடைக்கும் ஆற்றல்கள். |
| E- வலு | 5. சரியானதை தெரிவு செய்தல். |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.
   1. A – 1, B – 5, C – 3, D – 4, E – 2
   2. A – 3, B – 2, C – 4, D – 5, E – 1
   3. A – 5, B – 2, C – 1, D – 3, E – 4
   4. A – 2, B – 3, C – 5, D – 1, E – 4
   5. A – 4, B – 1, C – 2, D – 5, E – 3 (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

21. நிறுவனமொன்றில் பணியாற்றும் இருவேறு மட்டங்களினைச் சேர்ந்த முகாமையாளர்கள் தொடர்பில் அங்கு நிலவும் கருத்துக்கள் வருமாறு,

**திரு.கஜேந்திரன்** : ஊழியர்கள் யாவரையும் நன்றாக அறிந்து வைத்திருப்பதுடன், அவர்களது கருத்துக்களை நன்கு செவிமடுக்கக்கூடியவர்.

**திரு. ஜெஸ்லி** : உரிய கருமம் தொடர்பில் சிறப்பறிவு இருப்பதுடன், உடனடியாகவே செயற்படும் ஆற்றலையும் கொண்டவர்.

மேலே திரு.கஜேந்திரன், திரு.ஜெஸ்லி ஆகியோர் கொண்டிருக்கக்கூடிய திறன்களினை சரியாக கொண்ட தொகுதி பின்வருவனவற்றுள் எது?

| | திரு. கஜேந்திரன் | திரு.ஜெஸ்லி |
|---|---|---|
| 1. | எண்ணக்கருத்திறன். | வினைத்திறன். |
| 2. | மானிடத்திறன். | தொழில்நுட்பத்திறன். |
| 3. | உற்பத்தித்திறன். | எண்ணக்கருத்திறன். |
| 4. | செயற்திறன். | மானிடத்திறன். |
| 5. | தொழில்நுட்பத்திறன் | எண்ணக்கருத்திறன். |

(…….)

22. எந்த ஒரு முகாமையாளரதும் பிரதான கடமைப்பாங்கு பின்வருவனவற்றுள் எதுவெனக்கருதுகின்றீர்?

1. இலாபங்களைப் பெருக்குதல்.
2. பணியாளர்களை மகிழ்வித்தல்.
3. நீடித்திருத்தலை உறுதி செய்தல்.
4. வாடிக்கையாளர்களை மகிழ்வுறச் செய்தல்.
5. நிறுவன இலக்குகளை நிறைவேற்றுதல். (…….)

23. பாடசாலை ஒன்றில் புதிதாக அதிபராக பொறுப்பேற்ற திரு. ரிஷிகேசன் பெருமளவு அதிகாரங்களை பிரதி அதிபர்கள், பகுதி தலைவர்கள் மற்றும் பாட இணைப்பாளர்களுக்கு பகிர்ந்து வழங்குகின்றார். இதன் மூலம் இப்பாடசாலையில் ஏற்படும் நன்மை அல்லாதது எது?

1. தவறுகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைந்து விடுதல்.
2. ஊக்கமுடைய ஊழியர் குழு உருவாகும்.
3. ஏனைய ஆளணியினரின் வேலையின் அளவு குறைவடைதல்.
4. மேற்பார்வையாளர்களின் பயிற்சியும் அபிவிருத்தியும் அதிகரித்தல்.
5. தீர்மானங்களை கலந்துரையாடி எடுப்பதன் ஊடே இலகுவில் நடைமுறைப்படுத்த முடிதல்.

(…….)

24. உலகில் இடம்பெறும் உற்பத்தி முறைகள் அட்டவணை X இலும், அவற்றினால் கிடைக்கும் அனுகூலங்கள் அட்டவணை Y இலும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A. கட்டளை உற்பத்தி<br>B. தொகுதி உற்பத்தி<br>C. பாய்ச்சல் உற்பத்தி | 1. கட்டளை உற்பத்தியுடன் ஒப்பிடுமிடத்து, அலகு கிரயம் குறைவடைதல்.<br>2. சந்தை நட்ட அச்சம் இல்லாதிருத்தல்.<br>3. விலை உயர்வெனினும், தரத்தில் சிறந்ததாக இருத்தல்.<br>4. பாரியளவில் சிக்கனத்தன்மை கிடைத்தல்.<br>5. தேவை, விருப்பங்கள் உயர்ந்த மட்டத்தில் பூர்த்தி செய்யப்படும்.<br>6. உற்பத்தி வினைதிறன் அதிகரித்தல். |

X இற்றும் Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1. A – 2,4 B – 3,5 C – 1,6
2. A – 3,6 B – 1,4 C – 2,5
3. A – 1,6 B – 2,5 C – 3,4
4. A – 3,5 B – 1,2 C – 4,6
5. A – 5,6 B – 2,4 C – 1,3 (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

25. உற்பத்தி நிறுவனமொன்றில் இருப்புக்கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பிலான கலந்துரையாடலின் போது பொதுமுகாமையாளரினால் கூறப்பட்ட கருத்தொன்று வருமாறு. "தற்போது நாம் தேவையற்ற ஒன்றை உற்பத்தி செய்யவோ அல்லது கொள்வனவு செய்யவோ வேண்டாம், ஏனெனில் எமது உற்பத்திகள் மிக விரைவாகவே பழமையுறுகின்றன." மேற்படி கூற்றின் ஊடாக பொதுமுகாமையாளர் வலியுறுத்திக்கூறும் இருப்புக்கட்டுப்பாட்டு முறையாக நீர் எதனைக் கருதுகின்றீர்?

1. உரிய நேரத் தந்திரோபாயம்.
2. ABC பகுப்பாய்வு
3. இரு கொள்கலன் முறை
4. இருப்பு மட்டமுறை
5. தொடர் இருப்பு அறிக்கைப்படுத்தும் முறை

(.......)

26. "உற்பத்திச் செயற்திறனை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான அளவீடே உற்பத்தித்திறன் என்பதாகும்." இடியப்பத்தினை தயாரித்து விற்பனை செய்யும் அபிலாஸ் வணிகத்தின் மொத்த உற்பத்தித்திறன் விருத்தியில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய முறையொன்றாக நீர் எதனைக் கருதுகின்றீர்?

1. உள்ளீட்டு மாவினை நிலையாக வைத்து இடியப்ப வெளியீடுகளை அதிகரித்தல்.
2. உள்ளீட்டு மாவினை குறைப்பதை விட கூடிய வேகத்தில் இடியப்ப வெளியீட்டினைக் குறைத்தல்.
3. இடியப்ப வெளியீட்டினை நிலையாக வைத்து உள்ளீட்டு மாவினைக் குறைத்தல்.
4. உள்ளீட்டு மாவினைக் குறைத்தலும், இடியப்ப வெளியீட்டினை அதிகரித்தலும்.
5. உள்ளீட்டு மாவினை அதிகரிப்பதை விட கூடிய வேகத்தில் இடியப்ப வெளியீட்டினை அதிகரித்தல்.

(.......)

27. "பிரியசகி தீஞ்சுவை சோலை" என்ற இனிப்பு பண்டங்களினை உற்பத்தி செய்யும் வணிக நிறுவனத்தின் செலவின வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A- உற்பத்தி தொழிற்சாலை காப்புறுதிக் கட்டணம்.
B- விற்பனைத் தரகுகள்.
C- கோதுமை மா, சீனி போன்ற உள்ளீட்டு கொள்வனவுகள்.
D- ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளம்.
E- தொழிற்சாலை மின் கட்டணம்.
F- தொழிற்சாலை இறைக்கட்டணம்.
G- துண்டு வீத ஊழியர் கூலிகள்.
H- மணித்தியால அடிப்படையிலான விநியோகவான் கட்டணம்.
I- தொழிற்சாலை வாடகை.

மேற்தரப்பட்டவற்றுள் அலகு பங்களிப்பினை கணிப்பிடுவதற்கு எடுத்துக்கொள்ள தேவையற்ற உருப்படிகளினைக் கொண்ட தொகுதியாக அமைவது எது?

1. A, D, F, I
2. B, C, E, H
3. C, F, G, I
4. D, F, H, I
5. E, G, H, I

(.......)

28. **கூற்று A** : நுகர்வோர் எதிர்பார்க்கும் முறையில் உற்பத்திப் பொருள் ஒன்றை உருவாக்குவதன் மூலம் நுகர்வோர் பெற்றுக்கொள்ளும் மகிழ்ச்சியே பெறுமதி என்பதாகும்.

**கூற்று B** : எதிர்பார்க்கும் பெறுமதி உற்பத்திப் பொருளில் கிடைக்குமாயின் நுகர்வோர் திருப்தியடைவதுண்டு.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்களிலும்,

1. இரண்டு கூற்றுக்களுமே சரியானவை.
2. இரண்டு கூற்றுக்களுமே தவறானவை.
3. கூற்று A சரியானது, ஆனால் கூற்று B தவறானது.
4. கூற்று A தவறானது, ஆனால் கூற்று B சரியானது.
5. கூற்று Aயும் Bயும் சரியானது என்பதுடன் கூற்று Bயினூடாக கூற்று A விபரிக்கப்படுகின்றது.

(.......)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

29. பின்வருவன சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் தொடர்பில் ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் ஆகும்.

A : உற்பத்தியாளர் தமக்கு முடியுமான உற்பத்திகளை குறைந்த கிரயத்தில் சந்தைக்கு அளிப்புச் செய்யின் நுகர்வாளர் கொள்வனவு செய்வர்.

B : தெரிவுச் சிக்கலுடைய வாடிக்கையாளரை மேம்படுத்துவதனூடாக கவர்ந்து கொள்ள முடிவதுண்டு.

C : உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களினை உற்பத்தி செய்வதற்கு பதிலாக சந்தைப்படுத்தக் கூடிய பொருட்களினை உற்பத்தி செய்தல்.

D : நுகர்வாளரைத் தூண்டாது உற்பத்திப் பொருளை சந்தைப்படுத்த முடியாது.

E : நுகர்வாளரைத் தூண்ட நவீன பண்புகளுடனும் உயர்தரங்களும் கொண்ட உற்பத்திகளை சந்தைகளுக்கு முன்வைத்தல்.

மேலே கூறப்பட்ட கூற்றுக்களுள் வாடிக்கையாளரை மையப்படுத்திய எண்ணக்கருவினைக் கொண்ட கூற்றினைக் குறிப்பிட்ட மாணவன் எவர் என கருதுகின்றீர்?

1. A 2. B 3. C 4. D 5. E (…….)

30. இரு பிரிவினருக்கிடையே அல்லது பலரிற்கிடையே வியாபாரம் இடம்பெறுதல் அல்லது பெறுமதிகளை பரிமாற்றி முடிவுக்கு கொண்டுவரல் மையசந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் எதுவாக கருதப்படும்.

1. பரிமாற்றம் 2. கொடுக்கல்வாங்கல் 3. வழங்கல்சங்கிலி
4. நிலைப்படுத்தல் 5. கேள்வி (…….)

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான சொற்களை இட்டு பூரணப்படுத்துக.**

31. அ) ………………………………… ஓரினத்தன்மை கொண்டதாக உற்பத்தி செய்ய முடிவதுடன், தனி நபர்களுக்கிடையில் வேறுபட்டதாக …………………………………அமைந்திருப்பதுண்டு.

ஆ) ………………………………… ஊடாக கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறுவது இலத்திரனியல் வர்த்தகம் எனப்படும். அதேவேளை ………………………………… நடவடிக்கைகள் அனைத்தும் வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்படுதல் இலத்திரனியல் வணிகம் எனப்படும்.

32. அ) ஒழுங்கு முறையாக கட்டமைக்கப்பட்ட அமைப்பொன்றின் பொதுப்பண்புகள் ………………………………… , ………………………………… என்பனவாகும்.

ஆ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டப்படி கூட்டிணைக்கப்பட்ட வரையறுத்த கம்பனிகள் ………………………………… , ………………………………… என வகைப்படுத்த படுவதுண்டு.

33. அ) முயற்சியாண்மையின் பொதுவான பண்புகளுள் எதனையும் வித்தியாசமான முறையில் காணுதல், எண்ணுதல், கருமமாற்றுதல் ………………………………… எனவும், நோக்கம் நிறைவேறும் வரை கூடிய உற்சாகத்துடன் செயற்படல் ………………………………… எனவும் கருதப்படும்.

ஆ) அலகு பொறுப்பு கட்டமைப்பின் எவையேனும் இரு தரப்பினர்களாக ………………………………… , ………………………………… ஆகியோரை குறிப்பிட முடிவதுண்டு.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

34. அ) நடைமுறைக்கணக்கில் போதிய பணம் இல்லாதவிடத்து வங்கிகளால் காசோலை மறுக்கப்படும் போது ........................................ என்ற பதம் எழுதப்படும் அதேவேளை, பிறப்பித்தவரே கொடுப்பனவை நிறுத்தும் உத்தரவினை வங்கிக்கு விடுத்திருக்கும் போது ........................................ என்ற பதம் எழுதப்படுவதுண்டு.

ஆ) விற்பனையகங்களற்ற சில்லறை வியாபாரங்கள் பொதுவாக இடம்பெறும் முறைகள் ........................................ , ........................................ என வகைப்படுத்த முடிவதுண்டு.

35. அ) இணைய வங்கி வசதியினை பெறுவதற்கு வங்கிகள் வாடிக்கையாளருக்கு ........................................ , ........................................ என்பனவற்றினை வழங்குவதன் ஊடே வலையமைப்பில் பிரவேசித்து கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடிவதுண்டு.

ஆ) காப்புறுத்தக்கூடிய இடர்கள் யாவற்றையும் அடிப்படையில் ........................................ , ........................................ என இரண்டாக வகைப்படுத்துவதுண்டு.

36. அ) ஏற்றுமதியாளரால் ஏற்றப்படும் பொருள் விபரங்களை உள்ளடக்கி சுங்கத்திற்கு சமர்ப்பிப்பது...................................... ஆக கருதப்படுகையில், இறக்குமதியாளரால் இறக்கப்படும் பொருள் விபரங்களை உள்ளடக்கி சுங்கத்திற்கு சமர்ப்பிப்பது ...................................... ஆக கருதப்படுவதுண்டு.

ஆ) வினைதிறன், பயனுறுதி என்பனவற்றுக்கிடையிலான தொடர்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | | எவ்வாறு செய்வது? | |
|---|---|---|---|
| செய்தது என்ன? | | சரியான விடயம் | பிழையான விடயம் |
| | பிழையான விடயம் | A | B |
| | சரியான விடயம் | C | D |

மேற்குறித்த ஆங்கில எழுத்துக்களினால் குறிக்கப்பட்டுள்ள நான்கு நிலைமைகளில் வினைதிறனான நிலைமைகளினை ......... ம் ......... ம் கொண்டிருக்கையில், பயனுறுதியான நிலைமைகளினை ....... ம் ......... ம் கொண்டிருப்பதுண்டு.

37. அ) பாடசாலை ஒன்றின் அதிபர் அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்திக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்வதானது, ஹென்றி மின்ட்ஸ் பேர்க்கின் ...................................... வகிபாகமாகவும் ...................................... உபவகிபாகமாகவும் கருதப்படுவதுண்டு.

ஆ) ஒழுங்கமைத்தல் கருமங்களில் பணியில் அமர்த்தப்பட்ட உழியர்கள் எதனை? எவ்வாறு? எத்தனை நாட்களில் ஆற்றுதல் வேண்டும் என்பதை தெளிவுபடுத்திக்கொள்வது ...................................... என்பதுடன், வேலை அலகுகளின் கருமங்களையும், இலக்குகளையும் தொடர்புறுத்துவது ...................................... எனவும் அழைக்கப்படுவதுண்டு.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

38. அ) வீட்டின் முன்புறம் சிறியளவில் நகைத்தொழிற்சாலை ஒன்றினை நடாத்தும் ஆதித்தன் ஜுவலெறியின் உற்பத்தி வரிசை ……………………………… ஆக அமைந்திருக்கையில், பத்திரிகை நிறுவனமொன்றில் அச்சிடப்படும் தினசரி பத்திரிகை ………………………………………. உற்பத்தி வரிசையாக அமைந்திருப்பதுண்டு.

ஆ) பொதுவாக களஞ்சியங்களில் இருப்பு தொடர்பில் கட்டளையிடும் அளவுகள் அதிகரிக்க அதிகரிக்க ………………………………… கிரயம் அதிகரித்துச் செல்லும் அதேவேளை, ………………………………… கிரயங்கள் குறைவடைந்து செல்வதுண்டு.

39. அ) பொதுவாக சந்தைகளை பல்வேறு மூலகங்களில் வகைப்படுத்திக் கொள்வர். இதன்படி கொள்வனவாளர்களது தேவை, விருப்பங்களுக்கேற்ப சந்தைகளை …………………………… , ………………………… என வகைப்படுத்திக் காட்டுவதுண்டு.

ஆ) பூச்சிய வழு, புள்ளிவிபர செயன்முறைக் கட்டுப்பாடு என்பன ………………………………… நுட்பமுறைகளாக கருதப்படுகையில், ABC பகுப்பாய்வு, உரிய நேர தந்திரோபாயம் என்பன ………………………………… முறைகளாக கருதப்படுவதுண்டு.

40. அ) ………………………………… இல்லாமல் கட்டுப்படுத்தல் செயன்முறை தொழிற்படமாட்டாது என்பதுடன் இச் செயன்முறையில் பெறுபேறுகளை அளவிடுவதற்கு ………………………………… உருவாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.


ஆ) நீண்டகாலத்தில் வாடிக்கையாளருக்கு பெறுமானமொன்றைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் வாடிக்கையாளரின் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வது ………………………………… எண்ணக்கரு மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன், மூலப்பொருட்களுக்கு கட்டளையிடுவதிலிருந்து இறுதி நுகர்வோரின் கைக்கு சென்றடையும் வரையுமான பாய்ச்சல் ………………………………… என அழைக்கப்படும்.

❖ ***41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளை தரப்பட்டுள்ள இடைவெளிகளில் எழுதுக***.

41. நாடொன்றின் பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பல்வேறு வகையில் பங்காற்றுவதுண்டு. அத்தகைய பங்களிப்புகள் நான்கினைத்தருக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………

42. நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பில் காட்டப்பட்டுள்ள பின்வரும் வரைபடத்தில் 1, 2, 3, 4 இலக்கங்களினூடாக காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை அல்லது நிலைமைகளைக் குறிப்பிடுக.




1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

43. முயற்சியாண்மைக்கும் பொருளாதார விருத்திக்கும் இடையிலான தொடர்பினை பின்வருமாறு வரைபடமொன்றில் காட்டமுடியும். அதன்படி இதில் உள்ள இடைவெளிகளை பூரணப்படுத்துக.

1. ................................... → புதியதொழில் வாய்ப்பு → 2. ...................................

→ 3. ................................... → 4. ................................... → 1.

44. முகாமைத்துவ கருமங்களுக்கும் Robert L.Kerts என்பவரின் முகாமைத்துவ திறன்களுக்கும் இடையிலான தொடர்பினைக் கொண்ட பின்வரும் அட்டவணையில் உள்ள இடைவெளிகளினை பூரணப்படுத்துக.

| திறன்கள் / முகாமைத்துவ கருமங்கள் | எண்ணக்கருதிறன் | மானிடதிறன் | தொழில்நுட்பதிறன் |
|---|---|---|---|
| திட்டமிடல் | 1. …………….. | ஊழியர் இயலுமை மதிப்பீடு | ஆய்வு நடவடிக்கைகளுக்கு |
| ஒழுங்கமைத்தல் | வேலைப்பகிர்வு | 2. …………………… | மேற்பார்வை |
| நெறிப்படுத்தல் | தலைமைத்துவம் | ஊக்கப்படுத்தல் | 3. …………………... |
| கட்டுப்படுத்தல் | இலக்குகள் அடைவதனை உறுதிசெய்ய | 4. …………………… | விலகல்களை இனங்கண்டு சீர் செய்ய |

45. நிறுவன செயற்பாடுகளின் பொதுப்பண்புகளினைப் பயன்படுத்தி தொழில்களினை தொகுதிகளாக்கும் செயன்முறையின் நான்கு வேறுபட்ட வடிவங்களை குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………..
3. ……………………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………………

46. செயற்பாட்டு முகாமைத்துவத்தில் உற்பத்தி முறைகள் தொடர்பிலான இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கூற்று A : நிலையான கட்டளையின் அடிப்படையில் தொடக்கத்திலிருந்து இறுதிவரையில் ஓர் உருப்படியொன்று உற்பத்தி செய்யப்படல்.

கூற்று B : ஒரே வகையான பொருளொன்றை தொடர்ச்சியாக நேர்வரிசையில் பாய்ந்து செல்லும் முறையில் எதிர்கால கேள்வியின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படல்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களிலிருந்து அவை ஒவ்வொன்றும் எத்தகைய உற்பத்தி முறை எனவும், அவற்றுள் அடங்கும் உற்பத்திகளுக்கு ஒவ்வோர் உதாரணமும் தருக.

| கூற்று | உற்பத்தி முறை | உதாரணம் |
|---|---|---|
| A | 1. …………………………… | 3. …………………………… |
| B | 2. …………………………… | 4. …………………………… |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

47. உழைப்பு உற்பத்தித்திறனை விருத்திசெய்யக்கூடிய நான்கு முறைகளினைத் தருக?

1. …………………………………………………………………………………………………………

2. …………………………………………………………………………………………………………

3. …………………………………………………………………………………………………………

4. …………………………………………………………………………………………………………

48. தற்போதைய நவீன பரிமாற்றுப் பொருளாதாரத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அடிப்படை சந்தை வகைகள் எவையேனும் நான்கினைத் தருக.

1. …………………………………………………………………………………………………………...

2. …………………………………………………………………………………………………………

3. …………………………………………………………………………………………………………...

4. …………………………………………………………………………………………………………...

49. வணிக நிறுவனமொன்றில் சிறந்த உயர் பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டிணைக்கப்பட்ட அணுகுமுறையினை வெளிக்காட்டும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் கூறுகள் நான்கினைத் தருக.

1. …………………………………………………………………………………………………………...


2. …………………………………………………………………………………………………………

3. …………………………………………………………………………………………………………...

4. …………………………………………………………………………………………………………...


50. பின்வரும் வரைபடங்கள் ஊடாக செயல் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவங்களில் வெளிக்காட்டப்படுபவை எவை என கீழே குறிப்பிடவும்.

1.




……………………………………………

2.




……………………………………………

3. .



……………………………………………

4.



……………………………………………

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
நான்காம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

## 4th Term Examination - 2023

NFWC

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகக்கல்வி - II<br>Business Studies - II | Thee Hours and ten minutes<br>Gr -13 (2023) | 32 | T | II |

- ❖ வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.
- ❖ ***அறிவுறுத்தல்கள்:***
  ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – II

***(01)*** அண்மைய ஆண்டுகளில் உலகம் முழுவதனையும் அச்சுறுத்திய கோவிட் தொற்று நிலைமைகளின் போது கற்றலுக்காகவும் பிறதேவைகளுக்காகவும் நிகழ்நிலையினை பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அனைத்து தரப்பினருக்கும் ஏற்பட்டதனை வாய்ப்பாக பயன்படுத்திய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் கற்ற மாணவர்களான றிடன், ஆகாஷ் ஆகியோர் இணைந்து நிகழ்நிலை வகுப்புக்களினை ஒழுங்கமைத்து வழங்கும் பணியினை மேற்கொள்வதற்கான “Oneline Education” (தொடருறு கல்வி) என்ற பெயரில் வணிகம் ஒன்றினை ஆரம்பிக்கின்றனர்.
இதன் வருகையினைத் தொடர்ந்து, நாடு முழுவதிலும் உள்ள ஆசிரிய வளவாளர்களிடம் கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைத்ததுடன், தேசியமட்ட பரீட்சை அடைவுகளும் உயர்ந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனினும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகள் மின்சாரத் தடை போன்றன. இந் நிறுவன கருமங்களை பாதிப்பதுடன், பல்வேறு இடர்களுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. சில மாணவர் இந் நிகழ்நிலை கற்றலினால் பிறழ்வான நடத்தைகளை வெளிக்காட்டுவதாக பெற்றோர் தமது கருத்துக்களை குறிப்பிட்டுள்ளனர்.

*01)* அ) வணிகமொன்றின் பிரதான கருமங்கள் என்பதனால் கருதப்படுவன யாவை?
ஆ) மேற்படி “தொடருறு கல்வி நிறுவகம்” ஆற்றிவரும் அடிப்படை வணிகக்கருமங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

*02)* அ) வணிகமொன்றின் “இடர்” என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) தொடருறு கல்வி நிறுவகம் எதிர்நோக்கும் எவையேனும் நான்கு இடர்களினைத் தருக.

*03)* அ) தொடருறு வணிக உற்பத்திகளை நீர் பொருள் உற்பத்திகளாகவா? அல்லது சேவை உற்பத்திகளாகவா கருதுகின்றீர்?
ஆ) தொடருறு வணிகம் மாணவர்களின் தேவையினையா? அல்லது விருப்பத்தினையா பூர்த்தி செய்கின்றது. காரணத்துடன் குறிப்பிடுக?

*04)* மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையுடன் தொடர்புடைய பேரினச் சூழல் போக்குகள் இரண்டினை இனங்காண்பதுடன் அவை எவ்வாறு இந் நிறுவனத்தில் தாக்கம் செலுத்தும் என்பதை விளக்குக.

*05)* தொடருறு கல்வி நிறுவகம் தற்போது தொற்றுநோய் கட்டுப்பாட்டிற்கு வந்துள்ளதனைத் தொடர்ந்து தனது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தீர்மானிக்குமாயின் அதனால் கல்வி நிறுவனங்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தலா இரண்டினைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

**(02)** ''தனிவியாபாரமும் பங்குடமையும் உலகமெங்கும் அதிகளவில் காணப்படும் வணிக அமைப்புக்கள் ஆகும்.''

*01)* அ) தனிவியாபாரத்திற்கும், பங்குடமைக்கும் இடையில் நீர் காணும் நான்கு ஒற்றுமைகளினைத் தருக.

ஆ) பங்குடமைகளில் காணப்படும் எழுத்து மூல ஒப்பந்தம் அதன் வாழ்தன்மை மீது ஏற்படுத்தும் சாதகமான தாக்கங்கள் இரண்டினைத் தருக.

*02)* அ) ''உரிமைகள் பரவலடையாது சிலரது கைகளில் தக்க வைத்துக்கொள்ள வரையறுத்த தனியார் கம்பனிகள் உதவுவதுண்டு'' மேற்படி கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா? அவ்வாறாயின் விளக்குக.

ஆ) வரையறுத்த தனியார் கம்பனியில் நீர் காணும் நான்கு வரையறைகளினைத் தருக.

*03)* ''அண்மைய காலங்களில் உலகெங்கும் விரும்பி உருவாக்கப்படும் வணிகமுறை அங்கீகார வணிகம் என்பதாகும்.''

அ) அங்கீகாரம் பெறுபவரை தெரிவு செய்யும் போது அங்கீகாரம் வழங்குபவரால் கருத்தில் கொள்ளப்படும் காரணிகள் இரண்டினைத் தருக.

ஆ) ''அங்கீகாரம் பெறுபவரின் பாதகமான செயற்பாடுகள் காரணமாக அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பு பாதிக்கப்படக்கூடும்.'' எத்தகைய செயற்பாடுகள் வழங்குபவரின் நன்மதிப்பினை பாதிக்கும் என்பதற்கு நான்கு காரணங்கள் தருக.

*04)* ''தனியார் துறை நிறுவனங்களுக்கு நிகராக அரசும் வணிகக் கருமங்களில் ஈடுபட்டு வருகின்றது.''

அ) அரசு வணிகக் கருமங்களில் ஈடுபடுவதற்குரிய காரணங்கள் நான்கினை குறிப்பிடுக.

ஆ) அண்மைய காலங்களில் சில அரச நிறுவனங்களை, அரசு தனியார் மயமாக்கும் யோசனையினை கொண்டுள்ளது. இதனால் ஏற்படக்கூடிய சாதகமான தாக்கங்கள் இரண்டினைத் தருக.

*05)* அகவாணி என்ற முயற்சியாளர் சிறிய அளவில் ஆரம்பித்த கைவினைப் பொருள் உற்பத்தி வணிகம் இன்று சந்தையில் அதிக விருப்புக்குரிய வணிகமாக மாறி வருகின்றது. அதிகரித்த கேள்வியினை ஈடு செய்யவும், பாரிய வணிகம் ஒன்றாக இதனை மாற்றவும் பலர் அறிவுரை கூறியும் அகவாணி சிறு வணிகமாகவே நடாத்திச் செல்ல விரும்புகின்றார். இவ்வாறு அவர் விரும்புவதற்கான நான்கு காரணங்களைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

***(03)***

*01)* அ) காசோலையில் புறக்குறிப்பிடல் என்பதனால் கருதப்படுவது யாது எனக் குறிப்பிட்டு, காசோலையொன்றில் புறக்குறிப்பிடப்படும் எவையேனும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

ஆ) புறக்குறிப்பிடலின் இரு வகைகளினையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

*02)* ''வணிக வங்கிகள் வழங்கும் பிரதான சேவைகள் வைப்புக்களை ஏற்றலும், கடன்வழங்கலும் ஆகும்''

அ) இன்று வைப்பாளர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க வகையில் இணைய வங்கிச் சேவைகள் பலவற்றினை வங்கிகள் வழங்கி வருகின்றன. அவ்வாறு இணைய வங்கிச் சேவையூடாக வாடிக்கையாளர் பெறும் நான்கு சேவைகளினைத் தருக.

ஆ) வங்கிக் கடனுக்கும், வங்கி மேலதிக பற்றுக்கும் இடையிலான நான்கு வேறுபாடுகளினைத் தருக.

*03)* அ) மறுகாப்புறுதி (Re – Insurance) என்பதனை சுருக்கமாக விளக்குக.

ஆ) மறு காப்புறுதி மூலம் காப்புறுதிக் கம்பனிக்கும் காப்புறுதி செய்பவருக்கும் கிடைக்கும் தலா இரு அனுகூலங்களைத் தருக.

04) காப்புறுதி செய்யக்கூடிய இடரிலிருந்து, காப்புறுதி செய்ய முடியாத இடர் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதற்கு நான்கு வேறுபாடுகளினைத் தருக.

05) "தொடர்பாடலின்றி வணிக நடவடிக்கைகள் வெற்றி பெற முடியாது"

அ) வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்கு தொடர்பாடல் முக்கியத்துவமானது என்பதற்கு உமது பாடசாலையினை உதாரணமாக கொண்டு நான்கு காரணங்களைத் தருக.

ஆ) வாய்மொழி மூல தொடர்பாடல் சில சமயங்களில் தோல்வியடைவதுண்டு, இவ்வாறு தோல்வியடைவதற்குரிய இரு காரணங்களைத் தருக. (5 x 4 = 20 புள்ளிகள்)

**(04)**

01) அ) டொலர் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்கு வணிக்கல்வி கற்ற மாணவன் என்ற வகையில் உம்மால் முன்மொழியப்படும் நான்கு தீர்வுகளை குறிப்பிடுக.

ஆ) இலங்கை சந்தைகளில் அண்மைய மாதங்களில் விவசாய உற்பத்திகளுக்கான விலை அதிகரித்துச் செல்வதற்கு ஏதுவான நான்கு காரணங்களைத் தருக.

02) அ) காகிதாதிகளின் உற்பத்தி விற்பனையில் ஈடுபடும் உற்பத்தியாளர் ஒருவர் களஞ்சியசாலையினை நிறுவும் போது கவனம் செலுத்தும் நான்கு விடயங்களினைக் குறிப்பிடுக.

ஆ) களஞ்சியசாலைகளில் இடம்பெறக்கூடுமென்கின்ற பொருள் கையாளுமை தொடர்பிலான இரு செயன்முறைகளைக் குறிப்பிடுக.

03) "வணிகங்களின் வெற்றியில் போக்குவரத்தும் வழங்கல் சேலையும் மிக இன்றியமையாத ஒன்றாகும்.

அ) போக்குவரத்தும் வழங்கல் சேவையும் என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.

ஆ) வணிகங்களுக்கு போக்குவரத்து வழங்கல் சேவையின் முக்கியத்துவத்திற்கான இரு காரணங்களைத் தருக.

04) அ) உள்நாட்டு வியாபாரத்தில் இடை நடுவர்களைப் பயன்படுத்துவதன் மூலம் பெறப்படும் இரு அனுகூலங்களையும் இரு பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

ஆ) வணிக நடவடிக்கைகளுக்கு இணையத்தை பயன்படுத்தக் கூடிய எவையேனும் நான்கு வழிகளினைத் தருக.

05) அ) சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

i) கப்பல் தளச்சீட்டு

ii) நட்ட ஈட்டுக் கடிதம்

ஆ) சர்வதேச நாணய நிதியம் (IMF) ன் நான்கு நோக்கங்களினைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**(05)**

01) உமது பாடசாலையில் வர்த்தக மாணவர் மன்றத்தினரால் இம் மாதம் வர்த்தக கண்காட்சி ஒன்றினை பிரதேச நிறுவனங்களுடன் இணைந்து நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மன்றத் தலைவரினால் ஆற்றப்பட்ட பின்வரும் பணிகளினை நீர் கற்ற ஹென்றி மின்ற்ஸ் பேர்க்கின் முகாமைத்துவ வகிபாகங்களின் கீழ் வகைப்படுத்திக் காட்டுவதுடன், அதன் உபவகிபாகங்களையும் அருகே குறிப்பிடுக.

அ) மன்ற நிர்வாக சபைக்கூட்டத்தில் கண்காட்சி தொடர்பிலான முக்கிய தீர்மானங்களை அறிவித்தல்.

ஆ) கண்காட்சி ஏற்பாட்டாளர்களுக்கு உரிய இடங்களினை ஒதுக்கிக் கொடுத்தல்.

இ) கண்காட்சி நோக்கங்களை அடைவதற்காக மன்ற உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி வழிகாட்டல்.

ஈ) மின்சாரம் தடைப்படல், நீர்வழங்கல் போன்ற எதிர்பாராத நிலைமைகளுக்கு முகங்கொடுக்க தயாராதல்.

02) "மேற்படி வணிக மன்ற தலைவர் தோன்றும் பிரச்சினைகளின் போது, மாற்றுத்தீர்வுகளை மதிப்பிட்டு தீர்மானங்களை உடனுக்குடன் அறிவிக்கின்றார்." இங்கு சிறந்த மாற்றீட்டினைத் தெரிவு செய்வதில் அவர் கருத்தில் கொள்ளும் நான்கு நியதிகளினை குறிப்பிடுக.

03) அ) ஒழுங்கமைத்தலின் கீழ் இடம்பெறும் எவையேனும் நான்கு கருமங்களினை குறிப்பிடுக.
ஆ) "உயர்மட்ட முகாமையாளர்களினால், கீழ்மட்ட முகாமையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகாரங்களும், பொறுப்புக்களும் பங்கிடப்படுவதுண்டு." அதிகாரம், பொறுப்பு என்பனவற்றுக்கிடையே நீர் காணும் இரு வேறுபாடுகளினைத் தருக.

04) "தனி நபரொருவருக்கு பதவிக்கேற்ப கிடைக்கின்ற அதிகாரமும், அதற்கு மேலதிகமாக வேறு வழிகளில் கிடைக்கின்ற ஆற்றல்களாகிய வலுவும் மிக முக்கியமானவை ஆகும்."
அ) அதிகாரத்திற்கும், வலுவிற்கும் இடையில் நீர் காணும் நான்கு வேறுபாடுகளினைக் குறிப்பிடுக.
ஆ) கீழே தரப்பட்டுள்ள வலுக்களின் வகைகளில் ஏதேனும் ஒன்றினை உதாரணத்துடன் விளக்குக.
i. சட்ட ரீதியான வலு (Legal Power)
ii. நிபுணத்துவ வலு (Experit Power)

05) அ) "விரிந்த விசால அளவு" என்பதை விளக்குவதுடன் விரிந்த விசால அளவின் இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக.
ஆ) "நிதிசார் ஊக்கப்படுத்தல்களை காட்டிலும் நிதிசாரா ஊக்கப்படுத்தல்களை வழங்குவதிலேயே நிறுவனங்கள் கூடிய கரிசனை செலுத்துவதுண்டு." இதன்படி நிறுவனங்கள் ஏன் நிதிசாரா ஊக்கப்படுத்தல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன என்பதற்கு நான்கு காரணங்கள் தருக. (5 x 4 = 20 புள்ளிகள்)

**(06)** "கட்டுப்படுத்தல் திட்டமிடலுடன் மிக நெருங்கிய தொடர்புடைய கருமமாகும். எனவே தான் திட்டமிடலை முன்னோக்கல் எனவும், கட்டுப்படுத்தலை பின்னோக்கல் எனவும் குறிப்பிடுவர்"
01) அ) பின்னோக்கல் கருமமாகிய கட்டுத்தடுத்தல் ஏன் முக்கியத்துவமானது என்பதற்கு நான்கு காரணங்களினை முன்வைக்குக.
ஆ) கட்டுப்படுத்தல் செயன்முறையின் படிமுறைகளினை வரிசைக்கிரமமாக குறிப்பிடுக.

02) "நிறுவனங்கள் கட்டுப்பாட்டுக் கருமங்களுக்காக பல்வேறு நுட்பமுறைகளினை பயன்படுத்துவதுண்டு" நிறுவனங்கள் பயன்படுத்தும் எவையேனும் இரு கட்டுப்பாட்டு முறைகளை குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றை சுருக்கமாக விளக்குக.

03) கீழே தரப்படுவது வினோ அல்வா உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தி தொடர்பிலான சில தகவல்கள்" ஆகும்.

| | | |
|---|---|---|
| கட்டளைக் கிரயம் ( ஒரு கட்டளைக்கு) | - | 4 ரூபா |
| அலகுக் கிரயம் | - | 20 ரூபா |
| பேணும் கிரயம் (ஒரு அலகுக்கு) அலகு கிரயத்தில் | - | 10 % |
| வருடாந்த கேள்விக்கேற்ப உற்பத்தி | - | 10,000 அலகுகள் |
| மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனைப் பெறுமதி | - | 12,00,000 ரூபா |
| மொத்த மாறும் செலவு | - | 700,000 ரூபா |
| மொத்த நிலையான செலவு | - | 300,000 ரூபா |

பின்வருவனவற்றை கணிப்பிடுக.
அ) பொருளாதாரக் கட்டளைக் கணியம்
ஆ) இலாபம்
இ) அலகுக்கான பங்களிப்பு
ஈ) சமப்பாட்டுப் புள்ளிக்கான உற்பத்தி அலகுகள்

04) எட்டு வருட காலம் வெளிநாட்டில் உழைத்த பணத்தினைக் கொண்டு நாடு திரும்பிய லோசிதகுமார் என்பவர். அங்கு பெற்ற அனுபவத்தினைக் கொண்டு நகைத் தொழிற்சாலை ஒன்றினை வடமாகாணத்தில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளார்.
அ) பொருத்தமான இட அமைவினைத் தெரிவு செய்கையில் இவர் கருத்தில் கொள்ளும் நான்கு காரணிகளினை குறிப்பிடுக.
ஆ) இட அமைவினைத் தெரிவு செய்த பின்னர் லோசிதகுமார் தொழிற்சாலை தள அமைப்பு தொடர்பில் சிந்தித்து "கலதள அமைப்பு" சிறந்ததென்ற தீர்மானத்திற்கு வருகின்றார். இதன்படி இவரது உற்பத்திக்கு கலத்தள அமைப்பு ஏன் பொருத்தமானது என்பதற்கு இரு காரணங்களினை முன்வைக்குக.

05) நடுத்தர முகாமையாளர்களுடனான கலந்துரையாடலில் உற்பத்தி நிறுனமொன்றின் பொது முகாமையாளர் கூறிய கருத்து வருமாறு,

"நாம் நகரப்புறத்தில் மிக நெருக்கடியான இடத்தில் தொழிற்சாலையினை அமைத்துள்ளோம். எனவே இயன்றவரை இடவசதிகளை உச்சமாக பயன்படுத்த வேண்டும். களஞ்சியங்களில் ஏதாவது பொருளொன்றிற்குரிய இருப்பு மட்டத்தை அதிகரிப்பதற்கு இடமளிக்கப்படலாகாது."

அ) மேலே முகாமையாளர் குறிப்பிட்ட இருப்பு மட்டம் எதுவென நீர் கருதுகின்றீர்? இம்மட்டத்தினை தீர்மானிப்பதில் கருத்தில் கொள்ளும் எவையேனும் மூன்று காரணிகளை குறிப்பிடுக.

ஆ) மேற்படி உம்மால் குறிப்பிடப்பட்ட இருப்பு மட்டம் அதிகரிக்குமாயின் நிறுவனத்தில் ஏற்படும் இரு பிரதிகூலங்களினை குறிப்பிடுக. (5 x 4 = 20 புள்ளிகள்)

**(07)** "தரக்கட்டுப்பாட்டின் முழுமொத்த நோக்கம் யாதெனில், இலாபகர நிலையினை அதிகரிக்கச் செய்தல் என்பதாகும்."

01) அ) பொருள் ஒன்று நுகர்வாளரது தேவை, விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான ஆற்றலை கொண்டிருக்குமாயின் அதில் உள்ளடங்கியுள்ள எவையேனும் நான்கு பண்புகளினை குறிப்பிடுக.

ஆ) "தரக்கட்டுப்பாட்டு செயன்முறையானது முடிவுப் பொருட்களை மட்டும் பரிசோதிப்பதுடன் தொடர்புடையதல்ல"
மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீரா?
அவ்வாறாயின் மூன்று காரணங்கள் தருக.

02) "இன்று வணிக நிறுவனங்கள் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு பெருமளவு நிதியினை செலவிடுவதுண்டு." இதன்படி ஆராய்ச்சி அபிவிருத்தியின் நான்கு முக்கியத்துவங்களைத் தருக.

03) அ) நவீன தொழில்நுட்ப முறைகளினை உற்பத்தியில் புகுத்துவதற்கு தீர்மானித்துள்ள உற்பத்தியாளர் ஒருவர் இதனூடாக அடைய எதிர்பார்க்கும் நான்கு அனுகூலங்களை குறிப்பிடுக.

ஆ) செயற்பாட்டு செயன்முறையில் பயன்படுத்தப்படும் பின்வரும் நவீன உற்பத்தி முறைகளின் சுருக்கக் குறியீடுகளினால் கருதப்படும் நவீன உற்பத்தி முறையின் விரிவாக்கத்தினை எழுதுக.

i. C A M     ii. C A D     iii. C N C     iv. C I M

04) க.பொ.த உயர்தரத்தில் வர்த்தக துறையினை கற்று வெளியே டினோஜன், டெனியோ ஆகிய இரு மாணவர்களில் ஒருவர் தான் பொருட்களை வாங்கி விநியோகம் செய்யும் பணிகளில் ஈடுபட இருப்பதாக குறிப்பிடும் அதேவேளை மற்றையவர் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட இருப்பதாக குறிப்பிடுகின்றார்.

அ) சந்தைப்படுத்தலுக்கும், விற்பனைக்கும் இடையில் நீர் வேறுபாடுகளை காண்கின்றீரா?

ஆ) வேறுபாடுகள் இருப்பின் அவற்றிற்கிடையில் எவையேனும் மூன்று வேறுபாடுகளைத் தருக.

05) சந்தைப்படுத்தல் வணிகர்களுக்கு எத்தகைய முக்கியத்துவமுடையது என்பதற்கு நான்கு காரணங்களை முன்வைக்குக.

***(08)***

01) சந்தைப்படுத்தல் எண்ணக்கருவும், வாடிக்கையாளர் எண்ணக்கருவும் முற்று முழுதாக வாடிக்கையாளரை மையப்படுத்திய எண்ணக்கருக்கள் ஆகும். இவை ஒவ்வொன்றிலும் வணிகர் கருத்தில் கொள்ளும் தலா இரண்டு காரணிகளினை குறிப்பிடுக.

02) மைய சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களில் பிரதானமானதே "பரிமாற்றம்" என்பதாகும்.

அ) "பரிமாற்றம்" என்பதனை விளக்குக.

ஆ) பரிமாற்றம் ஒன்று முழுமையடைவதற்கு இருக்க வேண்டிய தேவைப்பாடுகள் நான்கினைத் தருக.

03) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

அ) இலக்கு சந்தை (Terget market)

ஆ) நிலைப்படுத்தல் (Positioning)

இ) துண்டமாக்கல் (Market Segmentation)

04) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் வணிகம் ஒன்றினை நடாத்தி வரும் திரு. சுப்பிரமணியம் என்பவர் பொருள் இருப்பு தொடர்பான மாதாந்த தகவல்களாக பின்வருவனவற்றை முன்வைத்துள்ளார்.

இழிவு இருப்பு பயன்பாடு நாளொன்றிற்கு 60 அலகுகள்
உச்ச இருப்பு பயன்பாடு நாளொன்றிற்கு 100 அலகுகள்
மறுகட்டளைக் காலம் - இழிவு நாட்கள் 20
மறுகட்டளைக் காலம் – உச்ச நாட்கள் 30
மறுகட்டளைத் தொகை – 4000 அலகுகள்

மேற்காட்டிய தகவல்களினூடாக பின்வருவனவற்றை கணிக்கு.

அ) மறு கட்டளைமட்டம்
ஆ) இழிவு இருப்பு மட்டம்
இ) உச்ச இருப்பு மட்டம்
ஈ) சராசரி இருப்பு மட்டம்

05) "சந்தைப்படுத்தல் மைய எண்ணக்கருக்களில் ஒன்றே செலுத்தப்பட்டதும், உரிமையாக்கப்பட்டதுமான ஊடகம் என்பதாகும்." மேற்படி செலுத்தப்பட்டதும், உரிமையாக்கப்பட்டதுமான ஊடகம் என்பவற்றினை தனித்தனியாக விளக்குக.

(5 x 4 = 20 புள்ளிகள்)